கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 06.02.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் புரதத்தின் செயல்திறனை கண்டறிய MALDI TOF–ல் கைரேகை தொழில்நுட்பவியல் பற்றிய நேரடி அனுபவ பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிரித் தொழில்நுட்ப சிறப்பு மையத்தில் "MALDI TOF கைரேகை தொழில்நுட்பவியல்" என்ற தலைப்பில் பிப்ரவரி 5 மற்றும் 6 ஆகிய இரண்டு நாட்கள் நேரடி அனுபவப் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. பயிற்சியில் பல்வேறு கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலிருந்து மாணவர்கள் பேராசிரியர்கள் ஆராய்ச்சியாளர்கள் பங்குபெற்று பயனடைந்தனர்.

துவக்கவிழாவில், திட்ட இயக்குனர் மற்றும் பேராசிரியர் முனைவர். எஸ். மோகன்குமார் உயிரித்தொழில்நுட்பவியல் மகத்துவ மையம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இம்மையம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தையும் தனியார் கூட்டாண்மைகள் பற்றிய முக்கிய விவரங்களையும் அவர் பகிர்ந்து கொண்டார். மேலும், புரத அடிப்படையிலான ஆராய்ச்சியில் MALDI TOF செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தாவர மூலக்கூறு மற்றும் உயிர்தொழில்நுட்ப மையம் மற்றும் உயிர்தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் அவர்கள் தனது துவக்க உரையில் புரதவியல் வளர்ச்சி மற்றும் பயன்பாடுகளை விரிவாக விவரித்தார். மருத்துவத்துறையில் புற்றுநோய் கண்டறிதல், ஒற்றை செல் புரதவியல் மற்றும் தொல் உயிரியல் ஆராய்ச்சிகளில் இதன் முக்கிய பங்குகளை அவர் விளக்கினார். புரதவியலில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திர கற்றல் நுட்பங்களை இணைக்கும் வழிகளை அவர் எடுத்துரைத்தார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விதை மைய இயக்குனர் முனைவர்.ஆர்.உமாராணி அவர்கள் தனது தலைமை உரையில் விதை புரதங்களின் வணிக மதிப்பு மற்றும் உலக சந்தையில் அவற்றின் தேவையை விளக்கினார். ஊட்டச்சத்து நிறைந்த விதை புரதங்களை கண்டறிந்து மக்கள் நலனுக்கு அவற்றை பயன்படுத்தும் முக்கியத்துவத்தை முன்வைத்தார். மேலும், தொழில் முனைவுத்

திறமைகளை ஆராய்வதற்கான வாய்ப்புகளை பங்கேற்பாளர்களுக்கு பரிந்துரைத்தார். உயிரி தொழில்நுட்பவியல் துறைத்தலைவர் முனைவர்.ஈ.கோகிலாதேவி அவர்கள் நன்றியுரைத்தார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உயிர்தொழில்நுட்பத் துறை இணைப் பேராசிரியர்கள் முனைவர். எஸ். வெள்ளைக்குமார் முனைவர் நா.பாரதி மற்றும் உதவிப்பேராசிரிபயர்கள் முனைவர் மா.சுதா, முனைவர் ந.சரண்யா, ஸ்பின்கோ பயோடெக் நிறுவனத்தின் தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் கார்த்திகேயன் ஆகியோர் MALDI TOF மென்பொருள் செயல்பாடுகள் இயந்திரங்களில் மாதிரிகளை உட்செலுத்தும் நெறிமுறை விளக்கம், மாதிரிகளை தயார்படுத்துவதற்கான செயல்முறை விளக்கம் புரதவியல் பகுப்பாய்வு ஆய்வுகள், தரவு பகுப்பாய்வுகளுக்காக பயன்படுத்தப்படும் மென்பொருள் விளக்கம் மற்றும் ஆய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் முடிவுகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பதை பற்றியும் பயிற்சி அளித்தனர். பயிற்சியின் முடிவில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

*மக்கள் தொடர்பு அலுவலர்*